# ஈரோட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு! – 8 ஆம் பக்கத் தொடர்ச்சி

உங்கள் ஒவ்வொருவரிடமும் நான் கேட்டுக்கொள்வது, மக்களோடு நேரடித் தொடர்பில் இருங்கள். மக்களுடன் பேசுங்கள். அவர்களின் நம்பிக்கையை மட்டும் நீங்கள் பெற்றுவிட்டால், நிச்சயம் அவர்கள் உங்களை நம்புவார்கள். யாரும் அந்த நம்பிக்கையைக் கெடுக்க முடியாது. நான் ஏதோ இந்த வரவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலை மட்டும் மனதில் வைத்துப் பேசுகிறேன் என்று நினைக்காதீர்கள். மக்களின் நம்பிக்கையை நீங்கள் பெற்றுவிட்டால், அதைவிடப் பெரிய சொத்து எதுவுமே இல்லை. உங்களின் எதிர்காலத்துக்கு அது நிச்சயம் பயன்படும்.

### கண்கொத்திப் பாம்பு

மக்களிடம் பேசும்போது மிகக் கவனமாகப் பேசுங்கள். நீங்கள் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு வார்த்தையும் முக்கியம். இன்று அனைவர் கையிலும் அலைபேசி இருக்கிறது. தி.மு.க. நிர்வாகிகள், குறிப்பாக இளைஞர் அணி நிர்வாகிகள் ஏதேனும் தவறாகப் பேசிவிட மாட்டார்களா, தவறாக நடந்து கொள்ள மாட்டார்களா என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் எச்சரிக்கையாகப் பேசுங்கள். சிறிய தவறு கிடைத்துவிட்டால்கூட அதைப் பெரியதாக ஊதிவிடுவார்கள். எதிரிகளும் துரோகிகளும் கண்கொத்திப் பாம்பு போலக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

யார் வாக்குச்சாவடியில் யார் அதிக வாக்குகள் பெற்றுத் தரப்போகிறீர்கள் என்று உங்களுக்குள் ஓர் ஆரோக்கியமான போட்டி இருக்க வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் எந்த வாக்குச்சாவடி என்பது இப்போது எங்களுக்குத் தெரியும். "நான் இந்தத் தெருவுக்குப் பொறுப்பு, இத்தனை வாக்குகளுக்கு நான் பொறுப்பு, இத்தனை குடும்பங்களுக்கு நான் பொறுப்பு எடுத்துக்கொள்கிறேன்" என்று உங்களுக்குள் திட்டமிட்டு, கவனத்துடன் பணியாற்றினால் நுணுக்கமான அளவில் மிகப் பெரிய வெற்றியை நாம் பெறலாம். உதாரணமாக, ஒரு வாக்குச்சாவடியில் 1,000 வாக்காளர்கள் இருக்கிறார்கள் என்றால், அந்த 1,000 வாக்காளர்களையும் கிளை மற்றும் பகுதி நிர்வாகிகள் நிச்சயம் சந்தித்திருக்க வேண்டும். அதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

### குறிப்பேட்டில் பதிவு செய்யுங்கள்

இந்தப் பணிகளையெல்லாம் செய்யும்போது மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களின் அனுமதியைப் பெற்று, ஆலோசனை செய்துவிட்டு இந்தப் பணிகளில் இறங்குங்கள். நிச்சயம் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதிச் செயலாளர்கள் இளைஞர் அணி களத்தில் இறங்குகின்ற பணிக்கு உங்களுக்குத் துணையாக நிற்பார்கள், உங்களுக்கு வழிகாட்டுவார்கள். தேர்தலுக்கு இன்னும் சரியாக ஒரு மாதம்தான் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் நீங்கள் எத்தனை பேரைச் சந்தித்துப் பேசினீர்கள் என்பதை ஒரு குறிப்பேட்டில் பதிவு செய்யுங்கள். உங்களின் தேர்தல் பணிகளை எழுதி வையுங்கள், புகைப்படம் எடுத்து, அதைக் குறிப்போடு சேர்த்து வையுங்கள்.

நான் நிச்சயம் பிரச்சாரத்துக்காக இன்னும் ஒரு 10, 15 நாட்களில் மீண்டும் இங்கு வருவேன். ஈரோட்டுக்கும் நாமக்கல்லுக்கும் வருவேன். அப்பொழுது உங்களின் குறிப்பேட்டை எடுத்துப் பார்ப்பேன். நீங்கள் எவ்வளவு வேலை செய்துள்ளீர்கள் என்று உங்களிடம் கேட்பேன், உங்களின் கருத்துகளை நான் கேட்பேன். நீங்கள் என்னிடம் சொல்ல வேண்டும், "நான் இவ்வளவு பேரைச் சந்தித்துள்ளேன், இவ்வளவு வாக்குறுதிகளை நான் உறுதி செய்துள்ளேன்" என்கிற அந்த உறுதியை நீங்கள் அளிக்க வேண்டும்.

நான் மீண்டும் மீண்டும் உங்களுக்குச் சொல்கிறேன், யார் உண்மையாக இளைஞர் அணியில் உழைக்கிறார்களோ அவர்களுக்கு நிச்சயமாகப் பெரிய வாய்ப்புகள் தேடி வரும். உங்களின் உழைப்புக்கான அங்கீகாரத்தை நம் தலைவர் அவர்கள் சரியான நேரத்தில் உங்களுக்கு வழங்குவார். அதற்கு நான் பொறுப்பு. நம் தலைவர், நான் எப்படி உங்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறேனோ, அதேபோல நம் தலைவர் நம் அனைவரையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். உங்கள் உழைப்பை மட்டும் அல்ல, நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன் என்பதையும் தலைவர் தினமும் கவனித்துக் கொண்டிருக்கிறார். இது எனக்கு மட்டும் வைத்த தேர்வு இல்லை. நம் இருவருக்கும் சேர்த்து வைத்த தேர்வு, நம் குழுவிற்கு வைத்த தேர்வு.

### மெய்ப்பிக்க வேண்டும்

அந்தத் தேர்வில் சாதாரணமாகத் தேர்ச்சி நிச்சயமாகப் பெற்றுவிடுவோம். ஆனால் அது போதாது, மிகச் சிறந்த மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெற வேண்டும். அதைச் செய்துகாட்டுவீர்கள் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. தி.மு.க-காரன் என்றால், பொதுவாக என்ன சொல்வார்கள் தெரியுமா? 'சிங்கிள் டீயைக் குடித்துவிட்டு சற்றும் தளராமல் தேர்தல் வேலை பார்க்கிறான்' என்று சொல்வார்கள். அதை நாம் இப்போது காலத்துக்கு ஏற்ப, சற்று மாற்றிச் சொல்ல வேண்டும். 'தி.மு.க. இளைஞர் அணி என்றால், தலைமையிலிருந்து சிங்கிள் செய்தி வந்தால் போதும், அதை 234 தொகுதிகளிலும் வாக்குச்சாவடி வரை கொண்டு சேர்ப்பவன்தான் தி.மு.க. இளைஞர் அணி' என்பதை மாற்றிக் காட்டுவோம். நம் தலைவர் சொன்னது போல, 'தமிழ்நாடு என்றும் தலைகுனியாது' என்பதை நாம் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும். தமிழ்நாடு என்றைக்கும் டெல்லிக்குக் அவுட் ஆப் கண்ட்ரோல் என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டுவோம்.

தலைவர் நமக்கு ஓர் இலக்குக் கொடுத்துள்ளார். 'வெல்வோம் 200, படைப்போம் வரலாறு' என்று. ஆனால் நான் உங்களிடம் சொல்வதெல்லாம், அடுத்த ஒரு மாத காலம் நாம் கவனமாக நம் பணிகளைச் செய்தோம் என்றால், 200 அல்ல, 234 தொகுதிகளிலும் நிச்சயம் நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வென்று காட்டும். அந்த வெற்றி ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களிலிருந்து தொடங்க வேண்டும்.

### இளைஞர் அணி பங்களிப்பு

ஈரோடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, அந்தியூர் மற்றும் மிக முக்கியமாக கடந்த முறை நாம் வெற்றி வாய்ப்பைத் தவறவிட்ட மொடக்குறிச்சி, பவானி, கோபிசெட்டிபாளையம், பவானிசாகர், பெருந்துறை ஆகிய தொகுதிகளில் இருந்து இந்த முறை நாம் வெற்றி பெற்றாக வேண்டும். அதேபோல நாமக்கல் மாவட்டத்திலிருந்து முக்கியமாகச் சென்ற முறை நாம் இழந்த குமாரபாளையம், பரமத்தி வேலூர் தொகுதிகளிலிருந்து நாம் நிச்சயம் வெற்றி பெற்றாக வேண்டும். அந்த வெற்றிக்கு இளைஞர் அணியின் பங்களிப்பு மிக மிக முக்கியமாக இருக்க வேண்டும். வெற்றி என்றால் சாதாரண வெற்றியாக இருக்கக் கூடாது, மிகப் பெரிய வாக்கு வித்தி யாசத்தில் நாம் வென்று காட்ட வேண்டும்.

அதற்கு அடுத்த ஒரு மாதத்துக்குத் தேர்தல் மட்டும்தான் நம் கண்களுக்குத் தெரிய வேண்டும். அது மட்டும்தான் நம் இலக்கு. மே 4-ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை. வாக்கு எண்ணிக்கையின்போது 234 தொகுதியிலும் தி.மு.க. முன்னிலை, நம் கூட்டணி முன்னிலை என்கிற அந்தச் செய்தி வர வேண்டும். மீண்டும் 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' என்கிற குரல் ஒலித்து, அவர் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்க வேண்டும். இதை மனதில் வைத்து அடுத்த ஒரு மாதம் உங்களின் பணிகளை நீங்கள் வகுத்துக்கொள்ளுங்கள்.

நம்மை அழிக்கப்போவதாக ஏற்கனவே நிறைய பேர் சுற்றுகிறார்கள். புதிது புதிதாக நிச்சயம் வருவார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரே பதில்தான். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1940-களிலேயே கூறிவிட்டுச் சென்றுவிட்டார். என்ன சொன்னார் தெரியுமா? "தி.மு.கழகத்தை அழிக்க வேண்டும் என்று இன்று எங்களுக்கு நான்கு அடிக்கு நீங்கள் குழி வெட்டுவீர்கள். நீங்கள் குழியை வெட்டி முடிப்பதற்குள் நாங்கள் ஆறு அடி வளர்ந்துவிடுவோம். அதற்குப் பக்கத்தில் ஆறு அடிக்கு எங்களுக்கு ஒரு குழி வெட்டுவீர்கள். நீங்கள் குழியை வெட்டுவதற்குள் நாங்கள் 12 அடி வளர்ந்திருப்போம். நீங்கள் எங்களுக்குக் குழி வெட்ட வெட்ட நாங்கள் வளர்ந்துகொண்டே இருப்போம்." தி.மு.க-காரனை யாராலும் குழி தோண்டிப் புதைக்க முடியாது, யாராலும் வீழ்த்த முடியாது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்கே சொன்னார். அதை நாம் இளைஞர் அணி மற்றும் தேர்தல் களத்தில் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

நம் அனைவரையும் விட ஒருவர் இன்று இளைஞராக மிகத் துடிப்புடன் களத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். யாருக்காக வெற்றி பெறுகிறோமோ இல்லையோ, அந்த ஒருவருக்காக நாம் வெற்றி பெற்றே ஆக வேண்டும். அது வேறு யாரும் இல்லை, நம் முதலமைச்சர், நம் கழகத் தலைவர் அவர்கள்தான். அவர் இந்த ஐந்து ஆண்டுகள் செய்த உழைப்புக்கும், பட்ட கஷ்டத்திற்காவது இந்த உழைப்பை நாம் கொடுத்து வெற்றி பெற்றாக வேண்டும்.

### கருத்துக்கணிப்புகள்

இன்னொரு வேண்டுகோள். இப்பொழுது சமீபமாகத் தேர்தல் களம் நெருங்கியவுடன் நிறைய கருத்துக்கணிப்புகள் வரும். இப்போது நான் மதிய உணவு அருந்தும்போது தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்தேன், கருத்துக் கணிப்பு வந்திருந்தது. எல்லாக் கருத்துக் கணிப்புகளிலும் நாம்தான் வெற்றி பெறுவோம் என்று தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், தன்னம்பிக்கை இருக்கலாம் அளவுக்கதிகமான தன்னம்பிக்கையில் இருக்கக்கூடாது. கருத்துக் கணிப்பில் எவ்வளவு சொல்கிறார்களோ, அதைவிட மிகப் பெரிய வெற்றியை நாம் பெற்றாக வேண்டும். எனவே, அதை ஒரு கோரிக்கையாக உங்களுக்கு வைத்து, அடுத்த ஒரு மாதம் நம் அனைவருக்கும் தூக்கம், சாப்பாடு முக்கியம். ஆனால், அதைவிட தி.மு.க-வின் வெற்றி மிக மிக முக்கியம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் உங்களையெல்லாம் பிரச்சாரத்துக்கு வரும்போது சந்திப்பேன். அப்போது நீங்கள் அந்த வெற்றியை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த மாவட்ட நிர்வாகத்துக்கும், வருகை தந்திருந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி.வெங்கடாசலம், வி.சி.சந்திரகுமார், ராமலிங்கம், கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ், மண்டலப் பொறுப்பாளர் செந்தில் பாலாஜி, அமைச்சர் மதிவேந்தன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் நல்லசிவம், கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், மாவட்டப் பொறுப்பாளர்கள் கே.எஸ்.மூர்த்தி, தோப்பு வெங்கடாசலம், மாநகரச் செயலாளர் சுப்பிரமணி யன், கழக அணிகளின் செயலாளர்கள் எஸ்.எல்.டி.சச்சிதானந்தம், சிந்து ரவிச்சந்திரன், வீரமணி, இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் சீனிவாசன், ஆனந்தகுமார், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் கந்தசாமி, பார் இளங்கோ, குறிஞ்சி சிவகுமார், கள்ளிப்பட்டி மணி, மணிமாறன், சரவணன், காயத்ரி சீனிவாசன், ரியா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் திருவாசகம், திருவேங்கடம், சன் சுரேஷ், விஸ்வநாத், பாலாஜி, மாநகர அமைப்பாளர் சேந்தபுகழன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

## கொரோனா காலத்தில் பழனிசாமியின் கேவலமான ஆட்சிக்கு சாத்தான்குளமே சாட்சி!

# பொய் சொல்லி குற்றவாளிகளைக் காப்பாற்ற முயன்ற எடப்பாடி - பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

**சென்னை, மார்ச் 25-**

**அமைச்சர் எஸ்.ரகுபதி, நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றில், "கொரோனா காலத்தில் பழனிசாமியின் கேவலமான ஆட்சிக்கு சாத்தான்குளமே சாட்சி!" என்றும் - "பொய் சொல்லி குற்றவாளிகளைக் காப்பாற்ற முயன்ற எடப்பாடி பழனிசாமி பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சாத்தான்குளம் தந்தை ஜெயராஜ் மகன் பென்னிக்ஸ் கொலை வழக்கில் 9 போலீஸாரும் குற்றவாளிகள் என 6 ஆண்டுகளுக்குப் பிறகு தீர்ப்பு அளித்திருக்கிறது மதுரை கூடுதல் அமர்வு நீதிமன்றம்.

எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டில் 13 அப்பாவிகள் துள்ளத் துடிக்கக் கொல்லப்பட்டதற்கு அடுத்து நடந்த பெரிய வன்முறை, சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கு. 2020ஆம் ஆண்டு சாத்தான்குளத்தில் செல்போன் கடை வைத்திருந்த தந்தை ஜெயராஜ், மகன் பென்னிக்ஸ் இருவரின் அதிர்ச்சி மரணங்கள் தமிழகத்தைத் தாண்டி உலகளவில் அதிர்ச்சி அலைகளை உண்டாக்கியது.

### கொடூர மனித உரிமை மீறல்!

அவர்கள் கொல்லப்பட்டதற்கு முந்தைய மாதம்தான் அமெரிக்க போலீஸாரால் ஜார்ஜ் ஃபிளாய்ட் கொல்லப்பட்டார். அதற்காக உலகம் முழுவதும் அனைத்துத் தரப்பு மக்களும் கைகோத்துப் போராடினார்கள். அதற்கு இணையான ஒன்றாக மனித உரிமை கொடூரமாக சாத்தான்குளம் சம்பவம் பேசப்பட்டது. இந்தியா முழுக்க சாமானியர்கள் தொடங்கி, பிரபலங்கள் வரை கண்டனங்களைத் தெரிவித்தார்கள்.

சாத்தான்குளம் சம்பவத்தை 'இரட்டைப் படுகொலை' என்று விமர்சித்த அன்றைய எதிர்க் கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காவல்துறையினர் மீது கொலை வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று தொடர் அழுத்தம் கொடுத்தார். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்குத் தேவையான அனைத்துச் சட்ட உதவிகளையும் தி.மு.க. வழங்கும் என்று உறுதியளித்து, சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடக் கோரி ஆரம்பக் கட்டத்திலேயே குரல் கொடுத்தார். ஜெயராஜ், பென்னிக்ஸ் குடும்பத்தினருக்கு திமுக சார்பில் ரூ. 25 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.



இத்தனைக்கும் ஜெயராஜும் பென்னிக்ஸும் குற்றவாளிகள் அல்ல. 'கொரோனா ஊரடங்கு நேரத்தில் விதியை மீறிக் கடையைத் திறந்து வைத்திருந்தார்கள்' என்பதுதான் அவர்கள் மீதான எடப்பாடி பழனிசாமி காவல்துறையின் குற்றச்சாட்டு. இப்போது மூச்சுக்கு முந்நூறு தடவை, "கொரோனா காலத்திலும் சிறப்பான ஆட்சியைக் கொடுத்தோம்" என மார்தட்டுகிறாரே எடப்பாடி பழனிசாமி. அந்தக் கொரோனா காலத்தில்தான் ஜெயராஜ், பென்னிக்ஸ் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டன. கொரோனா காலத்தில் பழனிசாமியின் சிறப்பான ஆட்சிக்கு சாத்தான்குளமே சாட்சி!

கொத்தாகக் காவல்துறையினரால் பிடித்துச் செல்லப்பட்ட இருவரும், காவல் நிலைய விசாரணைக்குப் பிறகு சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால், சில மணி நேரத்தில் இருவருமே அடுத்தடுத்து இறந்து போக, 'உடல்நலக்குறைவு 'என்று வழக்கமான காரணத்தைச் சொல்லிக் கதையை முடிக்கப் பார்த்தது அன்றைக்கு ஆட்சியில் இருந்த எடப்பாடி பழனிசாமி அரசு.

### அ.தி.மு.க. ஆட்சியில் பலியான அப்பாவிகள்!

2020 ஜூன் 22ஆம் தேதி ஜெயராஜும் பென்னிக்ஸும் இறந்தார்கள். இரண்டு நாள் கழித்து 24ஆம் தேதி அன்றைய முதல்வர் எடப்பாடி பழனிசாமி அது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில், 'சிறையில் இருந்த பென்னிக்ஸ் தனக்கு மூச்சுத்திணறல் ஏற்படுவதாகச் சொன்னதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார். சிறையில் இருந்த ஜெயராஜ் தனக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்ததையடுத்து, மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்' எனக் குறிப்பிட்டார். போலீஸாரால் கொல்லப்பட்டவர்களை 'மூச்சுத்திணறல் - உடல்நலக்குறைவு' என முதல்வரே பொய் சொல்லிக் காவல் துறையினரைக் காப்பாற்றினார். பாதிக்கப்பட்ட ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகிய இரண்டு அப்பாவிகளை நோயாளி ஆக்கிய மனசாட்சி இல்லாத மனிதர்தான் எடப்பாடி பழனிசாமி. மாபாதகச் செயலைச் செய்துவிட்டு, கூச்சமே இல்லாமல் பச்சைப் பொய் சொன்னார் பழனிசாமி. 'உடல்நலக்குறைவு' என்று காரணத்தைச் சொல்லிக் கதையை முடிக்கப் பார்த்தது எடப்பாடி அரசு. காவல்துறையினர் நடத்திய கொலை வெறித் தாண்டவத்திற்கு ஆதரவு அளித்தவர்தான் பழனிசாமி.

எடப்பாடி பழனிசாமியின் நடவடிக்கையைக் கடுமையாக எதிர்த்ததோடு பாதிக்கப்பட்டக் குடும்பத்திற்கு ஆதரவாக மக்களோடு இணைந்து போராடியது திமுக. சாத்தான்குளம் கொடூரக் கொலைச் சம்பவத்தில் இன்றைக்கு நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. அதிமுக ஆட்சியில் மூடி மறைக்க நினைத்த வழக்கில் இன்று நீதிமன்றம் தீர்ப்பளித்ததன் மூலம் 'மூச்சுத்திணறல் - உடல்நலக் குறைவால்தான் உயிரிழந்தனர்' என பழனிசாமி சொன்ன அபாண்டப் பொய்யை வெட்ட வெளிச்சமாக்கி விட்டது. குற்றவாளிகளைக் காப்பாற்ற அன்று பொய் சொன்ன பழனிசாமியும் ஒருவகையில் குற்றவாளிதான். பொய் சொல்லி குற்றவாளிகளைக் காப்பாற்ற முயன்ற எடப்பாடி பழனிசாமி பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அம்மூர் பேரூராட்சி பா.ம.க. நகரச் செயலாளர் ஆர்.தங்கராஜ் தலைமையில் 50 பேர் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி முன்னிலையில் நடைபெற்றது. கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் ர்.வினோத்காந்தி, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமுர்த்தி, துரை மஸ்தான், குமுதா குமார், ஜி.கே.குமுமம் சந்தோஷ் காந்தி, பேரூர் செயலாளர் சி.பெரியசாமி, டான் போஸ்கோ பிரகாஷ், விக்னேஷ், யுவராணி, சேட்டு, விஜயகுமார், மகேஷ், இளைஞர் அணி பிரபு, ஜெயப்பிரகாஷ், ஜேம்ஸ், ஜீவா MC, சுற்றுச்சூழல் அணி பாபு மற்றும் பலர் உடனிருந்தனர்.



தூத்துக்குடி மாநகரம் 1. ஆம் இரயில்வே கேட் காந்தி சிலை அருகில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. அதில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், அமைச்சருமான பெ.கீதாஜீவன். காங்கிரஸ் கட்சியின் மாநில துணைத்தலைவர் ஏ.பி.சி. சண்முகம் உரையாற்றினர். மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்த சேகரன், மாவட்டப் பொருளாளர் சுசி ரவீந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் ராஜமோகன் செல்வின், மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், பகுதி செயலாளர் சுரேஷ்குமார், ஜெயக்குமார், ராமகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.